DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 43/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 10th day of October 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 1** | கிராமம் | : | பால்கரை |
| பெயர் | : | வளர்மதி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/பெ. | : | தங்கராஜ் | சமயம் | : | இந்து |
| வயது | : | 50 | ஜாதி | : | தேவேந்திரகுல வேளாளர் |
| தொழில் | : | விவசாயம் | | | |

நாள்: 10.10.2024
நேரம்: 03.20

1, 5, 6 எதிரிகள் ஆஜர். 2, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்கள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 3 ம் எதிரி இறந்துவிட்டபடியால் அவர் மீதான வழக்கு அற்றுபோய்விட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதன்மை விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எனது உறவினர்கள். 27.08.2022 ம் தேதி காலை 7.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்து அருகில் உள்ள வயலுக்கு சென்றேன். அப்போது 1, 2 எதிரிகள் என் இடத்தில் உள்ள கருவேல மரத்தை வெட்டி கொண்டிருந்தார்கள். நான் சென்று அவர்களிடம் ஏன் கருவேல மரங்களை வெட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு ஏன்டி தேவிடியா என்னை கேட்கிறாய் நான் வெட்ட தான் செய்வேன் என்று கூறிக்கொண்டு 1ம் எதிரி அருவாளை வைத்து இடது முழங்காலில் வெட்டினார். அதில் எனக்கு எலும்பு இரண்டாக பிளந்தது. 2ம் எதிரி சந்திரசேகர் லீவர்கம்பியை வைத்து எனது வலதுகாலில் அடித்ததில், எனது சுண்டுவிரல் மற்றும் அருகில் உள்ள விரல்களில் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டது. பின்னர் 2ம் எதிரி லீவர்கம்பியை வைத்து எனது நெஞ்சில் அடித்ததில் 3 விலாஎலும்புகள் முறிந்துவிட்டது.

4ம் எதிரி கம்பியை கொண்டு எனது முதுகில் அடித்தார். 3ம் எதிரி கம்பியை வைத்து அடித்ததில் எனது வலதுகை சுண்டுவிரலில் எனக்கு காயம் ஏற்பட்டது. 5, 6 எதிரிகள் எனது தலைமுடியை பிடித்து இழுத்து அடித்தார்கள். நான் கத்தி சத்தம் போடவும் எனது மகன் ஜெயமுருகன் சம்பவ இடத்திற்கு வந்தார். 1, 2 எதிரிகள் எனது மகன் ஜெயமுருகனையும் கம்பியை கொண்டு அடித்தார்கள். அதில் எனது மகனுக்கு தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. 4ம் எதிரி எனது மகனை இடுப்பில் அடித்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது மகள் ஜெயமாலதி வந்து விலக்கிவிட்டார், அவரையும் எதிரிகள் அடித்து தோள்பட்டை, வலதுகை சுண்டுவிரல் ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. எதிரிகள் என்னை அடித்ததில் நான் மயங்கிவிட்டேன். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்ட எங்கள் அனைவரையும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு ஜெயபாரதி என்பவர் சேர்த்தார்.

நான் சிகிச்சையில் இருந்தபோது பி1 நகர் காவல் நிலைய போலிசார் எங்களிடம் விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை)**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.10.10 16:42:34 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 43/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 10th day of October 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 2** | கிராமம் | : | பால்கரை |
| பெயர் | : | ஜெயமுருகன் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | தங்கராஜ் | சமயம் | : | இந்து |
| வயது | : | 30 | ஜாதி | : | தேவேந்திரகுல வேளாளர் |
| தொழில் | : | சென்ட்ரிங் வேலை | | | |

<u>நாள்: 10.10.2024</u>
<u>நேரம்: 03.40</u>

1, 5, 6 எதிரிகள் ஆஜர். 2, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்கள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 3 ம் எதிரி இறந்துவிட்டபடியால் அவர் மீதான வழக்கு அற்றுபோய்விட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதன்மை விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும், எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். அ.சா.1 எனது அம்மா. கடந்த 27.08.2022 ம் தேதி காலை 7.00 மணிக்கு நான் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபோது 1, 2 எதிரிகளின் சத்தம் கேட்டது. நான் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்து பார்த்தபோது எனது அம்மாவான அ.சா.1 டன் 1, 2 எதிரிகள் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். 1ம் எதிரி லீவர்கம்பியை வைத்து எனது அம்மாவின் இரண்டு கால்களிலும் அடித்ததில், இடது முழங்காலில் பலத்த காயம் ஏற்பட்டது. எனது அம்மா கீழே விழுந்துவிட்டார். நான் சென்று விலக்கியபோது, 1ம் எதிரி என்னை இடது பக்க தலையில் வெட்டி, இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார். எதிரிகள் அனைவரும் சேர்ந்து என்னை அடித்தார்கள்.

பின்னர் எனது அக்கா ஜெயமாலதி வந்து தடுத்தபோது, எனது அக்காவையும் எதிரிகள் சேர்ந்து அடித்தார்கள். 2ம் எதிரி லீவர்கம்பியை வைத்து எனது வலதுபக்க காதில் அடித்ததில், காது அறுந்து இரத்தம் வலிந்தது. அதே கம்பியை வைத்து எனது இடது கையில் அடித்ததில் முழங்கை ஒடிந்துவிட்டது. 4ம் எதிரி என்னை கம்பியை வைத்து அடித்தார். 1, 2, 4 எதிரிகள் என்னை விரட்டி விரட்டி அடித்தார்கள். நான் சற்று தூரம் சென்று மயங்கி விழுந்துவிட்டேன். எதிரிகள் எனது அக்காவை அடித்ததில் அவருக்கு தோள்பட்டை மற்றும் கைகள் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனது அக்காவும் அடிதாங்க முடியாமல் அந்த இடத்தில் இருந்து ஓடிவிட்டார். எதிரிகள் அனைவரும் சேர்ந்து எனது அம்மாவை அடித்தார்கள். 2ம் எதிரி, எனது அம்மாவை அடித்ததில் எனது அம்மாவுக்கு வலதுகால் பாதத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டது. 3ம் எதிரி எனது அம்மாவின் தலைமுடியை பிடித்து இழுத்து கம்பியால் எனது அம்மாவின் வலதுகை சுண்டுவிரலில் அடித்தார். அதில் எலும்புமுறிவு ஏற்பட்டது.

2ம் எதிரி எனது அம்மாவின் நெஞ்சில் ஏறி மிதித்ததில் அவருக்கு நெஞ்சில் 3 விலாஎலும்புகள் முறிந்துவிட்டது. பின்னர் எனது அம்மா மயக்கமாகிவிட்டார். அனைத்து எதிரிகளும் சேர்ந்து எனது அம்மாவையும், என்னையும், எனது அக்காவையும் மாறி மாறி அடித்தார்கள். சாத்தையா மகன் ராஜேஷ், மேகலா, ஜெயபாரதி மற்றும் ரெஜின்குமார் ஆகியோர்கள் சம்பவத்தை பார்த்து விலக்கிவிட்டார்கள். அவர்களையும் எதிரிகள் மிரட்டினார்கள். எனது அக்கா மகள் கனிஷ்கா 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து, ஆம்புலன்ஸ் வந்தவுடன் காயம்பட்ட நாங்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். சிகிச்சையில் இருந்தபோது பி1 நகர் காவல் நிலையத்தில் இருந்து போலிசார் வந்து விசாரித்து எனது அம்மாவிடம் புகார்வாக்குமூலம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை)**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.10.10 16:42:41 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 43/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 10th day of October 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 3** | கிராமம் | : | பால்கரை |
| பெயர் | : | ஜெயமாலதி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/ பெ. | : | ஜெயமுருகன் | சமயம் | : | இந்து |
| வயது | : | 30 | ஜாதி | : | தேவேந்திரகுல வேளாளர் |
| தொழில் | : | விவசாயம் | | | |

<u>நாள்: 10.10.2024</u>
<u>நேரம்: 03.55</u>

1, 5, 6 எதிரிகள் ஆஜர். 2, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்கள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 3 ம் எதிரி இறந்துவிட்டபடியால் அவர் மீதான வழக்கு அற்றுபோய்விட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதன்மை விசாரணை:</u>**

நான் மேற்பட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும், எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். அ.சா.1 எனது அம்மா, அ.சா.2 எனது தம்பி. 27.08.2022 ம் தேதி காலை 7.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, எனது வீட்டிற்கு பின்புறம் எனது அம்மா அழும் சத்தம் கேட்டது. நான் என்ன சத்தம் கேட்கிறது என்று பார்த்தபோது, 2 ம் எதிரி லீவர்கம்பியை வைத்து எனது அம்மாவின் தலை, இரண்டு கைகளிலும், இரண்டு கால்களிலும், பாதங்களிலும் அடித்து கொண்டிருந்தார். 1 ம் எதிரி எனது அம்மாவின் வலதுகை சுண்டுவிரலில் அருவாளை வைத்து வெட்டினார். 3 ம் எதிரி அந்த அருவாளை வாங்கி இடதுகை சுண்டுவிரலில் வெட்டினார். 4 ம் எதிரி லீவர்கம்பியால் எனது அம்மாவின் முதுகில் மாறி மாறி அடித்தார். கீழே விழுந்து கிடந்த எனது அம்மாவை 2 ம் எதிரி நெஞ்சில் ஏறி மிதித்து, லீவர்கம்பியால் நெஞ்சில் அடித்ததில் எனது அம்மாவிற்கு நெஞ்செலும்பு

ஓடிந்துவிட்டது. கீழே விழுந்து கிடந்த எனது அம்மாவை 5, 6 எதிரிகள் தலைமுடியை பிடித்து இழுத்து, லீவர்கம்பியால் மாறி மாறி அடித்தார்கள்.

4ம் எதிரி லீவர்கம்பியால் எனது அம்மாவின் பின்தலையில் அடித்ததில் எனது அம்மா மயங்கிவிட்டார். நான் வீடியோ எடுத்துக்கொண்டு, அம்மா என்று கத்திக்கொண்டு ஓடிவந்தேன். 2ம் எதிரி, எனது செல்போனை பறித்து 5ம் எதிரியிடம் கொடுத்தார். எதிரிகள் அனைவரும் என்னை தேவிடியா, அவுசாரி, முண்ட என்று அசிங்கமாக பேசினார்கள். 2ம் எதிரி லீவர்கம்பியால் எனது இருதோள்களிலும் அடித்தார். 1ம் எதிரி லீவர்கம்பியால் என்னை அடித்ததில் வலதுகை சுண்டுவிரலில் காயம் ஏற்பட்டது.

தடுக்க வந்த எனது தம்பியை, 1ம் எதிரி அசிங்கமாக பேசி, அருவாளால் எனது தம்பியின் தலையில், 1ம் எதிரி வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார். 2ம் எதிரி லீவர்கம்பியை வைத்து எனது தம்பியை அடித்ததில் இடதுகையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது தம்பியை, 4ம் எதிரி கம்பியை வைத்து முதுகில் அடித்தார். 3, 5, 6 எதிரிகள் எனது தலைமுடியை பிடித்து இழுத்து மாறி மாறி அடித்து, ஏறி மிதித்தார்கள். 2ம் எதிரி, எனது இரண்டு கால்களிலும் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார். பின்னர் எனது மகள், எனது பெரியப்பா மகன் ஜெயபாரதிக்கு போன் செய்து, 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை)**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.10.10 16:42:49 +0530